முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1207

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

18.01.2023, புதன்கிழமை

1. ஞான வேலிகொண்ட அரங்கனே
ஞானிகள் பலம் கொண்ட தேசிகனே
வானவர்கள் மெச்சும் தர்மனே
வையகத்தைக் காக்க வந்த குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர்யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் தை மாதம் 04 ம் நாள் 18.01.2023, புதன்கிழமை)
வரம் தந்து ஆறுமுகன் யான் உன்னுள்ளே
வல்லமைபட வழி நடத்தி வருதல் காண
3. காணவே அரங்கன் ஓங்காரக்குடில்
கலியுகத்தின் ஞான சபையாகும்
ஞானம் தேடி அலைபவர்க்கு
நல்வழிகாட்டும் யோகசபையாகும்
4. ஆகவே உலகோர் அரங்கன் குடில் நாடி
அடைக்கலம் பெற அபயமென அரங்கன் திருவடி பற்றி ஞானம் பயில
பயிலுகின்ற மக்கள் அனைவருக்கும் பழுதின்றி ஞானசித்தி உறுதியாகும்
தயவாக அரங்கன் தர்மத்தை ஏற்று தரணிஎங்கும் செய்யும் மக்களுக்கு
5. மக்களுக்கு அவரவர் வினைகள் விலகி மண்ணுலகில் தர்மபலம் கூடியே
தேக்கமின்றி ஞான சித்தி உறுதி
தெரியவரும் அழியாமை என்கின்ற மகாசக்திகளும்
சக்திமிகு அரங்கன் திருவடியே சகலருக்கும் ஞானம் அருளும் உயரடியாகும்
6. ஆகவே உலகோர் அடிபணிந்து அரங்கன் வழிவழி தொடர
ஜெகமெங்கும் ஞானவான்கள் நிறைந்த
செப்பிடுவேன் ஞானிகள் வெளிப்பாடாக
சித்திமிகு அரங்கன் வழி கலியுகத்தில்
7. கலியுகத்தில் மக்களெல்லாம் ஞானிகளாகி
கண்டுரைப்பேன் ஞான யுக மாற்றம் செய்து
அழியாமை பெற்று ஞான ஆட்சித்தனை அரங்கன்
வழிதன்னில் உலகுக்கு தர நேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–